செய்தி வெளியீடு எண்:059 நாள்: 27.01.2017

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு அம்மாவின் அரசு மீது மத்திய அரசும் உலக சுகாதார நிறுவனமும் அபார நம்பிக்கை!**
**மீசல்ஸ் ரூபல்லா தடுப்பூசி திட்டத்தில் முதல்கட்டத்திலேயே தமிழகம் தேர்வு!**
**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் பெருமிதம்!**

---

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையில் எண்ணற்ற சாதனைகளை தொடர்ந்து நிகழ்த்தி வருகிறது. அதன் ஒரு அங்கமாக இன்று (27.01.2017) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களால் பத்திரிக்கையாளர்களுக்கான மீசல்ஸ் ரூபல்லா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி (Sensitization Programme for Press) சென்னை ஓமந்துரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயது வரை உள்ள அனைவருக்கும் **மீசில்ஸ் ரூபல்லா** என்ற தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் முதல் கட்டத்திலேயே தமிழகமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தில் **தமிழகம் தெரிவு செய்யப்பட்டதற்கு மத்திய அரசும் உலக சுகாதார நிறுவனமும் தமிழக அரசின் மீது வைத்துள்ள அபரிதமான நம்பிக்கையை காட்டுவதாகவே அமைந்துள்ளது**. இச்சிறப்பு முகாம் 2017 பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் துவக்கப்பட்டு ஒரு மாத காலம் நடைபெறவுள்ளது.

10 மாதம் முதல் 12 மாதங்கள் வரை உள்ள குழந்தைகளுக்கு முதல் தவணையும் 16 மாதம் முதல் 24 மாதங்களில் இரண்டாம் தவணையும் தட்டம்மை தடுப்பூசி வழக்கமாக வழங்கப்படுகிறது. ஆனால் **மீசில்ஸ் ரூபல்லா தடுப்பூசி** தட்டம்மை தடுப்பூசிகளுக்குப் பதிலாக மீசில்ஸ் மற்றும் ரூபல்லாவை கட்டுப்படுத்த வழங்கப்படும். **ஏற்கனவே தட்டம்மை தடுப்பூசி வழங்கப்பட்டிருந்தாலும் இத்திட்டத்தின்கீழ் 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயது வரை உள்ள அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படும்.** எந்தவொரு குழந்தையும் விடுபடாவண்ணம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மலைப் பகுதிகள், மாநகர குடிசைப் பகுதிகள், கட்டிடப் பணி புரியும் பிற மாநில மக்கள் தங்கியுள்ள பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவக் குழுவின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் முழு வீச்சில் வெற்றியடைய கல்வித்துறை, மகளிர் மேம்பாட்டுத் துறை, சமூக நலத்துறை, உள்ளாட்சித் துறை, தொழிலாளர் நலத் துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை போன்ற துறைகளுடன் இணைந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயல்படும் . மேலும் தேவையான Cold Chain–களை ஏற்படுத்துவதற்கும், எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ளவும் தயாரான நிலையில் உள்ளனர்.

இன்று (27.01.2017) சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் மாநில அளவில் நடத்தப்படும் பத்திரிக்கையாளர்களுக்கான (Sensitization programme) விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முக்கியகாரணம் இந்த புதிய தடுப்பூசி திட்டத்தை பொதுமக்களிடம் எடுத்து செல்வதற்கும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் பத்திரிக்கையாளர்களின் பங்கு இன்றியமையாததாகும். எனவே இந்த நிகழ்வு பத்திரிக்கையாளர்களுக்கான மீசல்ஸ் ரூபல்லா தடுப்பூசி பற்றிய போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்புதிய திட்டத்தை மக்களிடம் எடுத்து செல்வதற்கும் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும் பத்திரிக்கை துறையினர் தங்கள் ஒத்துழைப்பை நல்குமாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஜெ. ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு திட்ட இயக்குநர் மரு. தாரேஸ் அகமது இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி உட்பட மருத்துவ உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

---

**செய்தி வெளியீடு : இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**